

அமரர்

# அருணாசலம் தவராஜா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

09.09.2013

'ராஜாஸ் வாசம்'
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# அருணாசலம் தவராஜா

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**09.09.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# அருணாசலம் தவராஜா

அவர்கள்

| | | |
|---|---|---|
| பிறப்பு | | இறப்பு |
| 21.12.1939 | திதி வெண்பா | 10.08.2013 |

பெருமை நலம் நிறையப் பேணும் பண்பாளர்
அருணாசலம் தவராஜா – உருநீத்து
ஆடி தனில்
ஊர்த்துவன் தான் உற்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அப்பா!

ஈழத் திருநாட்டில் வடபுலமாகிய யாழ். நகரின் சைவமும், தமிழும் ஒருங்கே தளைத்தோங்கி வளரும் குடாநாட்டின் மேற்கு திசையில் நீர்வளமும், நிலவளமும் சிறந்து விளங்கும் வலிகாமம மேற்கின் வட்டுக்கோட்டையில் வளம் மிகுந்த குடும்பத்தில், அருணா சலம் - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனாக 21.12.1939 இல் இந்தப் பூமிப்பந்தத்தில் வித்தாகிய விருட்சம், குகராஜா என்ற சகோதரத் துணையுடன் இனிதே இளமைப் பருவம் நகர்ந்தது.

இவர் தந்தை நா.அருணாசலம் சிறந்த கல்விமான். இவர் மலேசியா நாட்டின் கல்வி அலுவலகராகக் கடமையாற்றியவர். தாய் செல்லம்மா வட்டுக்கோட்டை செல்வச் சீமானான சுப்பிரமணியம் அவர் களின் புதல்வி ஆவார்.

தனது கல்லூரிப் படிப்பை யாழ்ப்பாணக் கல்லூரியில் முடித்து, பின்னர் தனியார் கணக்கியல் கம்பனியில் முப்பத்தெட்டு வருட கால மாகப் பணியாற்றினார்.

இராசையா தங்கரத்தினத்தின் கடைசி புதல்வியாகிய சகுந்தலா தேவியை தனது இல்லத்துணைவியாகக் கரம்பிடித்து முறையே நாரா யணன், சத்தியன், அருணா (காலஞ்சென்ற), தெய்வீகன் ஆகியோரின் தந்தையாக விளங்கினார்.

நா.நிர்மலாதேவி, ச.ரஜனி ஆகியோரின் மாமாவாகவும், மற்றும் ஸ்ரீ வித்தியாதர், ஸ்ரீ கிருஷ்ணா, அருணா, கார்த்திகன் ஆகியோரின் அன்புத் தாத்தாவாகவும் இருந்தார்.

இவர் பழகுவதற்கு எளிமையானவராகவும், இனிமையானவரா கவும் விளங்கினார். எவருக்கும் உதவும் நல்ல மனம் படைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் எளிதில் பழகக்கூடிய எளிமை நிறைந்தவர். தவராஜா என்ற இயற்பெயர் கொண்ட இவர், எல்லோரும் தங்கராஜா என்று கூறு மளவுக்கு எவருக்கும் உதவும் உபகாரியாக திகழ்ந்த இவர் தனது சொந்த ஊரான வட்டுக்கோட்டையில் தனது இல்லத்தில் 10.08.2013 சனிக்கிழமை பிற்பகல் இந்த உலக லௌகிய வாழ்வுக்கு விடைபெற்று விண்ணுலக வாழ்வை எய்தினார்.

மனைவி : **திருமதி த. சகுந்தலாதேவி**

பிள்ளைகள் : **த. நாராயணன்,**
**த. சத்தியன்,**
**த. அருணா** [காலஞ்சென்ற],
மற்றும் **தெய்வீகன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விநாயகர் நாமாவளி



சிவ சிவ கெஜமுக கணநாதா
சிவகுண வுந்தித குணநீதா
கெங்கா தர கரகஜமுக வர்த்தன
மகா கணபதே பாலயமாம்.

ஆனந்த ஐங்கர வந்திடுவாய்
அந்தகன் வராமற் காத்தருள்வாய்
வா வா வா வா அங்குஜ பாசா
வந்தருள் இன்பம் தந்திடு நேசா.

வா வா வா வா நற்பரனே
வந்து நிதம் அருள் தந்திடுவாய்
ஏழைக்கென்றும் அருள்புரிவாய்
ஈஸ்வரி பாலா ஏரம்பா.

உமைதரு பாலா குருமணியே
உந்தன் அடைக்கலம் அடியேனே
சப்த சமுத்திரம் ஒத்திடு மும்மத
தந்தித் தொந்தி வயிற்றோனே.

ஆகுல வாகன அம்பிகை வர்த்தன
மகா கணபதே ஆலயமாம்
ஒரு கொம்பு இரு செவி மும்மதமோ
ஓரொரு நால்வாய் ஐங்கரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுதினமும் அருள் ஐங்கரனே
ஆதி அனாதியோ டச்சரமே
பார்பதி பாலா வா வா வா
பரதம் எமக்கே தா தா தா.

மங்களம் அருளுக ஐங்கர முதல்வா
அரிதிரு முருகா குரு பர நம நம
மகா கணபதே குரு சரணம்
மனமகிழ்ந் துவந் தருள் சரணம்

கூ கூ கணபதி கூ கூ என்னக்
கூ கூ என்ற குன்றே போற்றி
சரணம் சரணம் தந்தி முகா
சரவண பவனுக் உயர் துணைவா
(சரணம், சரணம், தந்தி)

## நாமாவளி

| | |
|---|---|
| கணபதி ஓம் ஜெய | கணபதி ஓம் |
| கணபதி ஓம் ஜெய | கணபதி ஓம் |
| மூஷீக வாகன | கணபதி ஓம் |
| மோதக கஸ்தா | கணபதி ஓம் |
| சாமரா கர்ணா | கணபதி ஓம் |
| விளம்பித சூத்திரா | கணபதி ஓம் |
| வாமன ரூபா | கணபதி ஓம் |
| விக்ன வினாயக | கணபதி ஓம் |
| மகேஸ்வர புத்திரா | கணபதி ஓம் |
| பாத நமஸ்தே | கணபதி ஓம் |

ஜயகணேச ஜயகணேச ஜயகணேச பாஹிமாம்
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ரட்சமாம்
(ஜயகணேச)

கணநாதம் கணநாதம் ஈஸ்வரி புத்ரம் கணநாதம்
விக்னவினாயக கணநாதம் சித்திவிநாயக கணநாதம்
பார்பதி புத்ரம் கணநாதம் முத்திப் பிரதாயக கணநாதம்
மூஷீக வாகன கணநாதம் மோதஹ ஹஸ்தா கணநாதம்
(கணநாதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ சிவ கெஜமுக கணநாதா
சிவகுண வந்தித குணநாதா
வா வா வா வா அங்குஜ பாசா
வந்தரு ளின்பம் தந்திடு நேசா
உமைதரு பாலா குருமணியே
உந்தனடைக்கலம் அடியோமே
மகா கணபதே குரு சரணம்
மனம் மகிழ்ந்துவந் தருள்சரணம்
சரணம் சரணம் தந்திமுகா
சரவண பவனுக் குயர் துணைவா.

## பிள்ளையார் துதி

ராகம் :- கருநாடக கேதகாந்தரி

கருணை வடிவானவரே பிள்ளையாரே
காத்தருள வாருமையா பிள்ளையாரே
கொடுமைகளை களைந்தருள்வாய் பிள்ளையாரே
பிரணவத்தின் பொருளானாய் பிள்ளையாரே
பிணியாவும் நீக்கிவைப்பாய் பிள்ளையாரே
தன்னம்தனிமையிலே பிள்ளையாரே
தவம் இருக்கும் வடிவம் என்ன பிள்ளையாரே
தொல்லைகளைத் தீர்த்தருள்வாய் பிள்ளையாரே
தொழுதிடுவோம் எந்நாளும் பிள்ளையாரே
(கருணை வடிவானவரே)

மதியூகம் கொண்டவரே பிள்ளையாரே
மாங்கனியைப் பெற்றவனே பிள்ளையாரே
உவமானப் பரம்பொருளே பிள்ளையாரே
உலகத்தை ஆண்டு கொண்டாய் பிள்ளையாரே
கலியுகத்தில் காட்சி கொண்டாய் பிள்ளையாரே
கறந்த பாலை நீ உண்டாய் பிள்ளையாரே
ஞானப்பழம் பெற்றவனே பிள்ளையாரே
ஞானம்தனை தந்தருள்வாய் பிள்ளையாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் துணை

# பஞ்சபுராணப் பாடல்கள்

## ஞாயிற்றுக்கிழமை

## தேவாரம்

பண் :- சீகாமரம் 2ம் திருமுறை

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ள நினைவு
அயினவே வரம் பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோ ளுமையங்கள் வெண்காட்டு முக்குலநீர்
தோய்வினையார் அவர்தம்மை தோயாவாம் தீவினையே

- திருஞானசம்பந்தர்

## திருவாசகம்

8ம் திருமுறை

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

- மாணிக்கவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

9ம் திருமுறை

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

- கருவூர்த்தேவர்

## திருப்பல்லாண்டு

பண் :- பஞ்சமம் 9ம் திருமுறை

மீண்டுமனத்தவர் போமின்கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின் குலாம்புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவில்லாதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

- சேந்தனார்

## பெரியபுராணம்

12ம் திருமுறை

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

- சேக்கிழார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

துள்ளுமது வேட்கைக் கணையாளே
தொல்லைதரு நீளக்கடலாலே
மெல்லவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெழிவோனே
செய்யகுமரேசத் திறலோனே
வள்ளல்தொழும் ஞானக் கழுலோனே
வள்ளிமணவாளப் பெருமாளே.

- அருணகிரிநாதர்

திங்கட்கிழமை

## தேவாரம்

பண் :- கொல்லி 3ம் திருமுறை

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நலலகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்லக் துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

- திருஞானசம்பந்தர்

## திருவாசகம்

8ம் திருமுறை

நானேயோ தவம் செய்தேன் சிவாயநமவெனப் பெற்றேன்
தேனாயின் அமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந் தெனதுளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்
ஊன் ஆரும் உயிர் வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திடவே.

- மாணிக்கவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

பண் : சாளரபாணி 9ம் திருமுறை

*எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட்டு எமையாளும்*
*சம்பந்தன் காளியர் கோன் தன்னையுமாட் கொண்டருளி*
*அம்புந்து கண்ணாளும் தானு மணித்தில்லைச்*
*செம்பொன் செய் அம்பலமே சேந்திருக்கை யாயிற்றே.*

- பூந்துருத்தி நம்பிகாட நம்பி

## திருப்பல்லாண்டு

பண் :- பஞ்சமம் 9ம் திருமுறை

*சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த*
*தூமணத் தொண்டருள்ளீர்!*
*சில்லாண்டில் சிதையும் சில*
*தேவர் சிறு நெறி சேராமே*
*வில்லாண்ட கனத்திரள்*
*மேருவிடங்கள் விடைப்பாகன்*
*பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே*
*பல்லாண்டு கூறுதுமே!*

- சேந்தனார்

## பெரியபுராணம்

12ம் திருமுறை

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துஉருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே

- சேக்கிழார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய்க்கிழமை

## தேவாரம்

**திருவிருத்தம்** **4ம் திருமுறை**

ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய் உடன்தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்து கந்தான் மனத்துள்ளிருக்க
என்றான் இமையவர்க்கு அன்பன் திருப்பாதிருப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே.

- திருநாவுக்கரசர்

## திருவாசகம்

**8ம் திருமுறை**

காலம் உண்டாகவே காதல்செய்து உய்மின் கருதரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன் வானவர் நன்னரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப் பிரான் தன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்துமுந்து மினே.

- மாணிக்கவாசகர்

## திருவிசைப்பா

**பண் : சாளரபாணி** **9ம் திருமுறை**

கலையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதம்மாறா வெள்ளானைமேல் கொள்ள
முளையா மதி சூடி மூவாயிரவ ரொடும்
அலையாவிளையாடும் அம்பலம் நின்னாடரங்கே.

- பூந்துருத்தி நம்பிகாட நம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பண் :- பஞ்சமம் 9ம் திருமுறை

சீரும் திருவும் பொலியச்
சிவலோகநாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாழனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பருசுநாம்
பல்லாண்டு கூறுதுமே!

- சேந்தனார்

## பெரியபுராணம்

12ம் திருமுறை

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத் துவிகமே யாக
இந்து வாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

- சேக்கிழார்

### புதன்க்கிழமை

## தேவாரம்

திருத்தாண்டகம் 6ம் திருமுறை

திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாரகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒரு காலும் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன் முன் மலர் பறித்திட்டுண்ராகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருநோய்கள் கெடவெண்ணீறணியாராகில்
அளியற்றார் பிறந்த வாறேதோ வென்னில்
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக் கிறாரே.

- திருநாவுக்கரசர்

## திருவாசகம்

**8ம் திருமுறை**

வேண்டத் தக்க தருவோய் நீ!
வேண்ட முழுதும் தருவாய் நீ!
வேண்டும் அயன் மார்க் அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டெனில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

- மாணிக்கவாசகர்

## திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **9ம் திருமுறை**

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என் உயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனை புயல்வணற்கு அருளிப்
பொன்நெடும் சிவிகையா யூர்ந்த
மேகநாயகனை மிகு திரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

- சேந்தனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **9ம் திருமுறை**

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிற்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

- சேந்தனார்

## பெரியபுராணம்

**12ம் திருமுறை**

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமயிலாக் கலை ஞானம் உணர்வு அரிய மெய்ஞானம்
தவ முதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.

- சேக்கிழார்

### வியாழக்கிழமை

## தேவாரம்

**பண் :- கொல்லி** **7ம் திருமுறை**

தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்கு
யாதும் ஐயற வில்லையே.

- சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

8ம் திருமுறை

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடமை எல்லாமும்
குன்றே அணையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையே?
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண் தோழ் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

- மாணிக்கவாசகர்

## திருவிசைப்பா

பண் : பஞ்சமம் 9ம் திருமுறை

தந்தையங் கனையார் தங்கள் மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்டு
அத்திலங் கொரு கூறு உன்கணவைத் தவருக்கு
அமருல களிக்கும் நின் பெருமை
பித்தனென் றொருக்கால் பேசுவ ரேனும்
பிளைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத்தானே.

- கருவூர்த்தேவர்

## திருப்பல்லாண்டு

பண் : பஞ்சமம் 9ம் திருமுறை

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கு அவ் வண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணக்கப் பொன்
கோயிலும் போனகமும் அருளிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிமணி முடித் தாமமும்
நாமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

- சேந்தனார்

## பெரியபுராணம்

**12ம் திருமுறை**

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தை
தேன் நக்க மலர் கொன்றைச் செஞ்சடையர் சீர்தொடுக்கும்
கானத்தின் எழு பிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்

- சேக்கிழார்

### வெள்ளிக்கிழமை

## தேவாரம்

**பண் :- தக்கேசி** **7ம் திருமுறை**

பொன்னும் மெய்ப் பொருளும் தருவானை
போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னை யென் பிழையைப் பொறுப்பானை
பிழையெல்லாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையனென் றறிய வொண்ணா
எம்மானை எழிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல் பழனத் தணி
ஆரூரானை மறக்கலு மாமே.

- சுந்தரர்

## திருவாசகம்

**8ம் திருமுறை**

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துன்
விரையார் குழற் கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கை தான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே.

- மாணிக்கவாசகர்

## திருவிசைப்பா

**பண் : இந்தளம்** **9ம் திருமுறை**

அன்னை நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில் தில்லைத்
தென்னை தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கு இட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
விகிர்தன் ஆடுமே.

- திருவாலியமுதனார்

## திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **9ம் திருமுறை**

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகு திரு வாரூரின்
மழவிடையார்க்கு வளிவளி யாளாய்
மணஞ்செய் குடிப் பிறந்த
பழவடியா ரொடும் கூடியெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

- சேந்தனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணம்

**12ம் திருமுறை**

*மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்*
*அண்ணலார் அடியார்தமை யமுது செய்வித்தல்*
*கண்ணினாலவர் நல்விளாப் பொலிவுகண்டார்தல்*
*உண்மையா மெனின் உலகர்முன் வருகென உரைப்பர்.*

- சேக்கிழார்

**சனிக்கிழமை**

# தேவாரம்

**திருவிருத்தம்** **4ம் திருமுறை**

*கருவுற்ற நாள் முதலாகவுன் பாதமே காண்பதற்கு*
*உருகிற் றென் னுள்ளமும் நானும் கிடந்தலத் தெய்வத்*
*தொழிந்தேன்*
*திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா*
*ஒரு பற்றிலாமையும் கண்டிரங்காய் கச்சியேகம்பனே.*

- திருநாவுக்கரசர்

# திருவாசகம்

**8ம் திருமுறை**

*இன்றெனக்கருளி இருள்கடிந்துள்ளத்து*
*எழுகின்ற ஞாயிறே போன்று*
*நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்*
*நீயலால் பிறிதுமற் றின்மை*
*சென்று சென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்*
*திருப்பெருந்துறை யுறை சிவனே*
*ஒன்று நீயல்லை அன்றி யொன்றில்லை*
*யாருன்னை அறியகிற்பாரே!*

- மாணிக்கவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

பண் : பஞ்சமம் 9ம் திருமுறை

முத்தீயாளர் நான்மறையர் மூவாயிரவர் நின்னோடு
ஒத்தேவாழும் தன்மையாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தே யென்று வண்டுபாடும் தென்தில்லையம்பலத்துள்
அத்தா உந்தன் ஆடல் காண அணைவதும என்று கொலோ.

-கண்டராதித்தர்

## திருப்பல்லாண்டு

பண் : பஞ்சமம் 9ம் திருமுறை

நிட்டையிலா உடல் நீத்து என்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவன் அடியாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த்திக்கு என் அகம் நெகவுறும்
அமிர்தினுக்கு ஆல நிழல்
பட்டனுக்கு என்னைத்தனபாற் பகுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

- சேக்கிழார்

## பெரியபுராணம்

12ம் திருமுறை

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல்
உன்னை என்நாளும் மறவாமை வேண்டும் நான் மகிழ்ந்து பாடின்
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

- காரைக்கால் அம்மையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி
# கதைச் சுருக்கம்

நவராத்திரி என்னும் சொல்லுக்கு ஒன்பது நாள்களில் செய்யப் பெறும் நோன்பு அல்லது உற்சவம் என்று பொருள். உற்சவம் முடியும் பத்தாம் நாளையும் கணக்கிட்டு வடநாட்டார் இதைத் தசரா என வழங்குவர். புரட்டாதி மாதத்துப் பூர்வ பக்க பிரதமைத் திதி முதலாக உள்ள ஒன்பது இரவுகள் நவராத்திரி எனவும், பத்தாம் நாள் விஜயதசமி எனவும் படும் வடக்கே காஷ்மீரத்திலிருந்து தெற்கே இலங்கை வரையிலும் மேற்கே பாஞ்சாலத்திலிருந்து கிழக்கே பர்மாவின் எல்லைப்புறம் வரையிலும் நவராத்திரி நோன்பு நோக்கப்படுகிறது. இந்துக்கள் அனைவருமே இந்தப் பூசையைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். பராசக்தியைப் போற்றி வணங்குவது இந்த விழாவின் நோக்கமாகும். கிருதயுகத்திலே பக்தியில் சிறந்த சுகேதன் என்னுமோர் அரசன் தனது இராச்சியத்தை இழந்து மனைவியோடு வனத்துக்கு போன போது அங்கிரன் என்னும் இருடி நவராத்திரி நோன்பு பூஜா மகிமையையும் அதன் முறையையும் உபதேசித்தார். அந்த அரசன் அவ்வாறே நவராத்திரிப் பூசையைப் பக்தியோடு செய்து தனது இராச்சியத்தை மீளவும் பெற்று வாழ்ந்திருந்தான். அதனால் அது முதலாக உலகத்தில் வருடந்தோறும் அந்தக்காலத்திலே துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி மூவரையும் முறையே ஒவ்வொருவருக்கும் மூன்று தினமாக ஒன்பது நாளும் பூசித்து ஒன்பதாம் நாள் ஆயுதங்களையும், புத்தகங்களையும் வைத்து பூசித்து வருகிறார்கள்.

இறைவனைப் பத்தி செய்பவர்கள் ஏதாவது முறையைக் கொண்டாடி பக்தி செய்வது வழக்கம். இத்தகைய தொடர்புகளுள் இறைவனை தாய் என்று சொல்லுவது தலையாயதாகும். தாய்க்கும் பிள்ளைக்கும் இடையே உள்ள இணக்கம் ஒப்பற்றது. உலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு எதையும் அதனோடு சீர் தூக்க முடியாது. ஆண்டவனிடத்தில் அடிமையானவன் பயபக்தி கொண்டு சற்று எட்ட நிற்கின்றான். தந்தை இடத்திலும் தனையன் மிக நெருங்கி உறவாடுவதில்லை. வயது முதிர முதிரப் பிதாவுக்கும் பிள்ளைக்கும் இடையே வேற்றுமை அதிகரித்து விடுகிறது. ஆனால் அன்னையின் இயல்பு என்றைக்கும் மாறாது தாயின் தன்மையுடைய தெய்வத்தை வழிபடுவது மிக எளிதானதாகும். பெற்றவளோடு பிள்ளை பழகுவதற்குச் சட்டதிட்டங்கள் ஒன்றும் கிடையாது. அண்டங்கள் அனைத்தும் சிவ சக்திமயமாய் இருக்கின்றன. சிவம் என்பது சேதனம், அறிவுப்பொருள், சக்தி என்பது அசேதனம் ஜடப்பொருள், இவையிரண்டும் இணை பிரியாது உலகெங் கும் இயங்குகின்றன.

நவராத்திரியை வழிபடும் முறைகள் பலவுள்ளது. கலைமகள் பெண்மணி அவளே ஒன்று முதல் ஒன்பது வரையான வயதுடைய பெண்களைத் தெரிதல் வேண்டும். முதல் நாள் ஒரு வயதுடைய குழந்தையையும் இரண்டாம் நாள் இரண்டு வயதுடைய குழந்தையையும் இவ்வாறே ஒன்பது தினங்களும் அந்த வெண்ணிக்கைக் கேற்ற வயதுள்ள குழந்தைகளை கலை மகளாகவே கருதி அலங்கார தூப தீப முதலியவற்றால் வழிபடுவார். முதன்மூன்று நாள்களும் வெற்றியை வேண்டி துர்க்கா தேவியையும், அடுத்த மூன்று தினங்களையும் செல்வத்தை வேண்டி இலக்குமியையும், அடுத்த மூன்று தினங்களும் கல்வியை வேண்டி சரஸ்வதியையும் வழிபடல் வேண்டும். ஒன்பதாம் நாள் இரவு ஆயுத பூசை எனப்படும் விஜயதசமி அன்று ஏடு தொடக்குதல் முதலான வித்தியாரம்பங்கள் நடைபெறும். சுருக்கமாகச் சொன்னால் பத்து நாள்களும் தெய்வீகம் நிறைந்த கலைத் திருவிழாவாகவே நடைபெறுகின்றன. வீடுகளில் கொலு வைத்து மற்றையோரையும் அழைத்து பெருங் கொண்டாட்டங்கள் நிகழ்த்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ குமரகுரு பரசுவாமிகள் அருளிச்செய்த

# சகலகலாவல்லி மாலை



## கட்டளைக் கலித்துறை

*வெண்டா மரைக்கன்றி நின்பதம்*
*தாங்க என்வெள்ளை யுள்ளத்*
*தண்டா மரைக்குத் தகாதுகொ*
*லோசகம் ஏழும்மளித்(து)*
*உண்டான் உறங்க ஒழித்தான் பித்(து)*
*ஆகஉண் டாக்கும் வண்ணம்*
*கண்டான் சுவைகொள் கரும்பே!*
*சகல கலாவல்லியே!* 01

*நாடும் பொருட்சுவை சொற்சுவை*
*தோய்தர நாற்கவியும்*
*பாடும் பணியிற் பணித்தருள்வாய்*
*பங்க யாசனத்திற்*
*கூடும் பசும் பொற்கொடியே*
*கனதனக் குன்று மைம்பாற்*
*காடும் சுமக்கும் கரும்பே*
*சகல கலாவல்லியே!* 02

*அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு*
*தார்ந்துன் அருட்கடலிற்*
*குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?*
*உளங் கொண்டு தெள்ளித்*
*தெளிக்கும் பனுவற் புலவோர்*
*கவிமழை சிந்தக் கண்டு*
*களிக்கும் கலாப மயிலே*
*சகல கலாவல்லியே!* 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்தா வினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே!. 04

பஞ்சப்(பு) பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்(து) அல ராததென்னே?
நெடுந் தாட் கமலத் (து)
அஞ்சத் துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் (து) திருந்தாய்
சகல கலாவல்லியே! 05

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழு(து) எளி(து) எய்தநல்
காய், எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங் காலும்அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!
சகல கலாவல்லியே! 06

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய், உள்ளங் கொண்டுதொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே! 07

சொல்விற் பனமும் அவதானமும்
மும்கவி சொல்லவல்ல
நல்வித்தை யும்தந்து அடிமைகொள்
வாய், நளி னாசனம் சேர்
செல்விக்(கு) அரிதென்(று) ஒருகால
மும்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே! 08

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ(டு)
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே! 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பன்கண் டளவிற் பணியச் செய்
வாய், படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலாவல்லியே! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பா

திருச்சிற்றம்பலம்

விந்தையே உருவமாகி
வெண்கலை பூண்டுகையில்
பக்தியாய் வீணையேந்தி
பலபல கீதம் பாடி
புத்தகத்தேவி யேனோ
புனிதமாமகளே சேயே
நித்தமும் பாடியேத்த - என்
நெஞ்சினுள் நிற்பாய் தாயே.

திருச்சிற்றம்பலம்

சகலகலா வல்லி மாலை முற்றிற்றது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் முருகா சரணம்! சரணம்!!

01. திருமுருகனின் படத்தை உங்கள் வீட்டு பூஜை அறையிலோ அல்லது முக்கியமான இடத்திலோ மாட்டி வையுங்கள்.

02. காலையில் எழுந்தவுடன் திருமுருகனைப் பார்த்து பரவசத்துடன் வணங்குங்கள்.

03. காலைக்கடன்களை முடித்துவிட்டு குளித்த பின் திருநீறு அணிந்து மணம் மிகுந்த ஊதுபத்தியை பற்ற வைத்துவிட்டு கந்த சஷ்டி கவசம் படியுங்கள். திருமுருகனின் 108 நாமாக்களையும் படியுங்கள்.

04. ஒரு பூவோ, சிறிது கற்கண்டோ, ஒரு பழமோ நைவேத்யமாக உள் அன்புடன் படையுங்கள். பூஜை முடிவில் நிவேதனப்பொருளை மற்ற வர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

05. கற்பூர ஆரத்தி காட்டி மனமாற நல்லன எல்லாம் வேண்டி பிரார்த்தனை செய்யுங்கள்.

06. அன்றாட வாழ்க்கையில் கோபம், பொய், பொறாமை, பேராசை ஆகியவைகளை நீக்கி அன்புடனும், பரோபகார சிந்தனையுடனும் தொழிலையும், கடமைகளையும் செய்யுங்கள்.

07. எல்லா பிரச்சனைகளுக்கும் திருமுருகனிடம் மனமாற முழு நம்பிக்கை யுடன் பிரார்த்தனை செய்வதின் மூலம் தீர்வு காணுங்கள்.

08. எளிமையான தூய்மையான ஆகாரமே உட்கொள்ளுங்கள்.

09. நேரம் கிடைக்கும் போதெல்லாம் வீட்டிலோ, முருகன் தியான மண்டபத்திலோ அமைதியாக அமர்ந்து திருமுருகனை மனதில் நிலை நிறுத்தி தியானம் செய்யுங்கள்! அல்லது முருகா சரணம் என்று ஜபம் செய்யுங்கள்! நல்லன நடக்கும்!

10. முடிந்தவரை ஏழை எளியவர்களுக்கு உதவுங்கள். அதனால் திரு முருகன் ஆனந்தம் அடைவார். உங்கள் வாழ்வு மலரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்



# கந்தர் சஷ்டிக் கவசம்

## முதலாவது கவசம்

## திருப்பரங்குன்றுறை தீரன்

**காப்பு**

*அமரர் இடர்தீர அமரம் புரிந்த*
*குமரன் அடி நெஞ்சே குறி*

*துதிப்போர்க்கு வல்வினை போம், துன்பம் போம் நெஞ்சில்*
*பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்*
*நிட்டையும் கைகூடும், நிமலர் அருள் கந்தர்*
*சஷ்டிக் கவசந் தனை*

## நூல்

*திருப்பரங் குன்றுறை தீரனே குகனே*
*மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா*
*குருக்குத் துறையுறை குமரனே அரனே*
*இருக்கும் குருபரா ஏரகப் பொருளே*
*வையா புரியில் மகிழ்ந்து வாழ்பவனே*
*ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோ நமோ*
*ஐயா குமரா அருளே நமோ நமோ*
*மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ*
*பழநியங் கிரிவாழ் பகவா நமோ நமோ*
*மழுவுடைய முதல்வன் முதலாய் நமோ நமோ*
*விராலி மலையுறை விமலா நமோ நமோ*
*மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ*
*சூரசம் கார துரையே நமோ நமோ*
*வீரவேல் ஏந்தும் வேளே நமோ நமோ*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு கரமுடைப் பரமா நமோ நமோ
கண்களீராறுடைக் கந்தா நமோ நமோ
கோழிக் கொடியிடைக் கோவே நமோ நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம் ரீம்
வவவ வவவ வா ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூழ்
வவவ வவவ களம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந் தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருக நிஷ் களங்கனே வருக
தாயென நின்னிரு தாள்பணிந் தேன்எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினமும் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வராமல் தடுத்து
நல்ல மனத்துடன் ஞான குரு உனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்து நீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா
நந்தன் மருகா நாரணி சேயே
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமி நாதா
சிவகிரி கையிலை திருப்பதி வேளூர்
தவக்கதிர் காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு
சந்நிதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக்(கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆம் சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொரு ளோனே
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அரியன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரையுமாக் கலைகளும்
தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத் துள்ள புண்ணிய தீர்த் தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிபுவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிட்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணெய்போல் எழிலுடை உன்னை
அல்லும் பகலும் ஆசா ரத்துடன்
சல்லாப மாய்உனைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள் வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
அரன்மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் துணை

## இரண்டாவது கவசம்

# செந்தில் மேய கந்தவேள்



சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக
அசுரர்குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண் டலமும்
ஆறிரு திண்புயத் (து)தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன் மணிபூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாழ் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா ல்நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக ல்தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு ள்தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க த்தாக்க தடையறத் தாக்க
பார்க்க ப்பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும் பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய ப்பாவையும் ஒட்டிய ச்செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினிற் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை ச்சொக்கு
குத்து குத்து சூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசய்ங் குன்மம் சொக்குச் சிரங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேல வனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ள்நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி ல்அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட ன்இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதும் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி க்கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாவது கவசம்

# பழநிப் பதிவாழ் அப்பன்



திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவனை சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா
பரமேசு வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக் (கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டாயிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசங் காரா துஷ்டநிஷ் டூரா
கையிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்(கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குரவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உருப்பொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
கருதிமெய் யோகம் சொல்லியது ஒரு முகம்
அருள் பெருமயில் மீதுஅமர்ந்தது ஒரு முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி தெய்வானையை மருவியது ஒரு முகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒரு முகம்
சூரனை வேலால் துணித்த(து) ஒரு முகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோ நம
பொருட்செந்தில் அம்பதி புரப்பாய் நமோ நம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோ நம
சூரகம் ஆவினன் குடியாய் நமோ நம
சர்வசங் கரிக்குத் தனயா நமோ நம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோ நம
எல்லாக் கிரிக்கும் இறைவா நமோ நம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூல வட்டத்தில் முளைத்தெழும் ஜோதியை
சால முக்கோணத் தந்தமுச் சக்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
அல்லும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற்கோ ணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேசுவரன் மகேஸ்வரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்
ஆகாச வட்டத்(து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர மூலத்தில் வாசியைக் கட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்கமாய்க் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாவர்
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து சீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியன் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்(டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறு முகமாய் அகத்துள்ளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன்விளை யாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரைதிரை மாற்றி நாளையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கண மாக
நினைத்த படியென் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க்(கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்(து) ஆறு முகமும்
மாறாதிருக்கும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னேவந்து
அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
தட்டாத வாக்கு சர்வா பரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரம்
வழுத்தும் என் நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிரம் சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்(கு) உதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்லவுன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அநேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் சூளி விடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துர்க்கை பிடாரி நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங்(கு) உருட்டி நொறுக்கிச்
சூலத்தால் குத்தித் தூளுதூ ளுருவி
வேலா யுதத்தால் வீசிப் பருகு
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவிஅக் கினியாய்த் தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினிச் சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் என்முன்னே நின்று
வாகனத் துடன் என் மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடனம்
வம்பதாம் பேதனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருபணி அட்சரம்
உந்தன் விபூதி யுடனே சபித்து
கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்!
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சட்கோண இறைவா!
சரணம் சரணம் சத்துரு சம்காரா!
சரணம் சரணம் சரவணபவ ஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

முற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காவது கவசம்

## திருவேரகத்துறை பெருமான்



ஓமென்னும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்ட துண்டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆணவம் நண்ணிடா(து) என்னைக்
காணநீ வந்து காப்பதுன் கடனே
சூளிசூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி
ஏகாட் சரமாய் எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
துதியற் சரத்தால் தொல்லுல(கு) எல்லாம்
அதிசய மாக அமைத்தவா போற்றி
திரியட் சரத்தால் சிவன் அயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மை யுற்றவனே
சதுரட் சரத்தால் சாற்றுதல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
பஞ்சாட் சரத்தால் பரமன் உருவத்தாய்த்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத் (து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அமர்ந்த மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்கள் பன்னிரண்டில் கதிரும்ஆ யுதத்தால்
தரங்குலைத் (து) ஓடத் தாரகா சூரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவசே னாதிபதி
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகளருள் ஈசன் புதல்வா
துட்டசம் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மாக
தெய்வமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என் பால்இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்ரகம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ(டு)என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிவே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியோடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
மூல ரோகங்கள் முடக்குள் வலிப்பு
திட்டு முறைகள் தெய்வச் சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்நோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஐந்தாவது கவசம்

# குன்றுதோறாடும் குமரவேள்

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவிய நாயகா
துள்ளி மயிலேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகா
சண்முக நதியும் சராபன்றி மலையும்
பன்முகம் நிறைந்த பழநிக்கு இறைவா
ஆறாறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண் ணீறணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப்பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநா யகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபாலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கும் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈஸ்வரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈஸ்வரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையால் எடுத்துக் கனமார்(பு) அணைத்தே
ஐயா! குமரா! அப்பனே! என்று
மார்பிலும் தோளிலும் மடியிலும் வைத்துக்
கார்த்திகேயா எனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா! வருகவென்(று)
அந்நேரம் வட்டமிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியாய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலங்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும்வாங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்
வாயில்கள்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலமும் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர்கஸ் தூரியும்
வலம்புரிச் சங்கொலி மணியணி மிடறும்
நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழை பங்காளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட வைரவர் ஆனந்தமாட
துஷ்ட மிகுஞ்சூழிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்த தாரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லட்சுமி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன்நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் ஜெயஜெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசிச்
சார்ந்தனம் என்ன சார்வரும் அநேக
பூதம் அடிபணிந் தேத்த வேதாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட
அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடை விடாமல்உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதஸ்வர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியுஞ் சிறப்புடன் இலங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்திகே ஸ்வரன் மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீர மயிலேறி வெற்றிவேல் எடுத்துச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சூரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற குலத்தை அறுத்துச் சயித்து
விட வேலாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும்சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்ப்பதி செந்தூர்
திருவாவி னன் குடி திருவேரகமும்
துய்ய பழநி சுப்பிரமணியன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவும் கையிலை
கண்ணிய மாவூற்று கழுகு மாமலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்
பதினாலுலகத்தினிலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவனாயிருந்(து) அடியார்தம்
பங்கிலிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும், கிருபைப் படியே
தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவ யோகம் நாடிய பொருளும்
தாட்டிகமாய் எனக்(கு) அருள் சண்முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

முற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாவது கவசம்



# பழமுதிர்சோலைப் கதிரோன்

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் கதனே ஐயனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவதேச னாதிபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய் தானே யாகி
வவ்வும் ணவவுமாய் விளங்கிய குகனே
பவ்வும் ணஉபாய் பழமுதிர் சோலையில்
தவ்வியே ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வாய்
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய் சென்றங்(கு)
அஞ்சலி செய்தவள் அமுதம் உண்டு
கார்த்திகை மாதர் கனமார் (பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீரவாகுவோ(டு) ஒன்பான்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிர தாயா சண்முக வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ்வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமதையாய் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து புரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண் டிதனே
'திருமால் அயன்சிவன்' சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலை மகளுடனே
அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல
ஆறுமுகத்துடன் அவதரித் தோனே
சிங்கமுகா சூரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ வமர்கள் தமக்குச்
சேனா பதியாய்த் தெய்வீகப் பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவே ரகமுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)
இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்குக் குருதே சிகனே
தேன்பொழில் பழநித் தேவ குமாரா
கண்பார்த்(து) எனையாள் கார்த்திகேயா என்
கஷ்டநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்ட லட்சுமிவாழ் அருளெனக்(கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருண கிரிதனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்குக் கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவலயத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசந் தான் செபிப் போரைச்
சிட்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த்திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவணபவ ஓம்
சரணம் சரணம் தமிழ்தரும் அரனே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.

முற்றிற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்

மனம் அல்லது எண்ணங்கள் ஒரு நிலையில் நிற்காமல் கடல் அலைகள் போல் அலைந்து கொண்டே இருக்கும். அந்த எண் ணங்களை அடக்கி மனதை ஒருநிலை நிறுத்தி கடவுளை தொடர்ந்து நினைப்பது தியானம். காலை மாலை என இரண்டு நேரமும் 15 நிமிடம் மனதை ஒரு நிலையில் நிறுத்தி கடவுளை நினைத்து தியானம் செய்வதால் மனவலிமை, உடல்வலிமை கூடும். இதனால் மன அமைதியின்மை, உடல் அசதி ஆகியவை நீங்கி உற்சாகத் துடன் அன்றாட வேலைகளை ஆனந்தமாக செய்ய முடியும்.

தியானத்தின் மூலம் சிறந்த நற்பயன் அடைய சுயகட்டுப்பாடு என்ற ஒழுங்குமுறை தேவை. சுயகட்டுப்பாடு என்பதில், உடல் சுத்தம் - உடல்பயிற்சி - மூச்சுப்பயிற்சி - புலனடக்கம் - மன ஒருமைப்பாடு ஆகியவை அடங்கும்.

தியானம் உலகமக்கள் எல்லாம் நன்மையடைய ஜாதி - மத - இன - மொழி பேதங்கள் கடந்த ஒரு பொதுவான வழி.

நல்ல சிந்தனையுடன் தியானம் செய்வதின் மூலம் மனதாலும் உடலாலும் நல்லவையே செய்ய வழி பிறக்கும்.

மனிதனிடத்தில் உள்ள தெய்வீக சக்தியைப் பயன்படச் செய் வதற்கு தியானமே ஒரு சிறந்த திறவுகோல். தியானத்தின் மூலமே நாம் கடவுள் தன்மையை அடைந்துவிட முடியும் என்பதை தொடர்ந்து தியானம் பயிலுவதன் மூலம் அறியமுடியும். தொடர்ந்து தியானம் செய்பவர்கள் எல்லாம் அவரவர் விரும்பும் மார்க்கத்தில் வெற்றி பெறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

பிறக்கும் பொழுது கொண்டுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொண்டுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வஞ் சிவன்தந்ததென்று கொடுக்கறியா(து)
இறக்கும் குலாமருக்கு என்சொல்லுவேன் கச்சியேகம்பனே! 01

ஓயாமல் பொய் சொல்வார் நல்லோரை நிந்திப்பார் உற்றுப் பெற்ற
தாயாரை வைவார் கதிஆயிரஞ் செய்வார் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குபகாரஞ் செய்யார் தமையண்டினர்க் கொன்றும்
ஈயார் இருந்தென்ன, போயென்னெ கச்சியேகம்பனே!

கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல் சூத்திரங் கோள்களவு
கல்லாமல் கைத்தவரோடு இணங்காமல் கனவினும் பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தெகையர் மாயையிலே
சொல்லாமல் செல்வந்தருவாய் சிதம்பர தேசிகனே! 03

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும் இந்தப்
பிடிசார்ந்த வாழ்வை நிலைப்பதல்லால் பொன்னின் அம்பலவன்
அடிசார்ந்து நாம் உய்யவேண்டுமென்றே அறிவாரில்லையே. 04

பிறவாதிருக்க வரதேரல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இது எப்படியோ
அறமார் புகழ்வதில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவாதிருமனமே அது காண் நல் மருந்துனக்கே. 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைக்க! சிந்திக்க!

## செயற்படுத்த வேண்டியவை

அன்பாய் இரு - ஆனால்
அடிமையாய் இராதே!
அழகாய் எழுது - ஆனால்
கருத்தின்றி எழுதாதே!
இரக்கமாய் இரு - ஆனால்
ஏமாறாதே!
எதற்கும் அஞ்சாதே - ஆனால்
எவரையும் அச்சுறுத்தாதே!
எல்லோரையும் நம்பு - ஆனால்
எதையும் இழக்காதே!
கடவுளை நம்பு - ஆனால்
கடமையை மறக்காதே!
தாராளமாய் இரு - ஆனால்
ஊதாரியாய் இராதே!
தாய்மொழியைப் போற்று - ஆனால்
பிறமொழியைத் தூற்றாதே!
நாட்டுக்கு உழை - ஆனால்
வீட்டை மறவாதே!
முதியோரை துணைகொள் - ஆனால்
எளியோரை இகழாதே!
வீரனாய் இரு - ஆனால்
வீணனாய் இராதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட...

**குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க:**

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள் (Loose Talks).
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள். (Diplomacy) விட்டுக்கொடுங்கள் (Compromise)
- சிலநேரங்களில் சில சங்கடங்களைந் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள் (Tolerance).
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக் காதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (Flexibility).
- மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகத்தின் தொழில்பாடுகளும், நோய்களும்

உடலின் வயிற்றறையினுள் முதுகுப்புறமாக முள்ளந்தண்டு எலும்புகளின் பக்கபுறங்களில் அமைந்துள்ள அவரைவித்து வடிவ முடைய அங்கங்கள் சிறுநீரகங்கள் என அழைக்கப்படும். உடலின் பிரதான கழிவகற்றும் அங்கங்களில் ஒன்றான சிறுநீரகம் பல லட்சக் கணக்கில் அமைந்த தொழிற்படும் அலகுகளான சிறுநீரக சிறுகுழாய் களை நோக்கியும் விலகியும் செல்லும் பரந்த குருதி வலையமைப் பைக் கொண்ட சிறுநீரகங்கள் அவற்றின் தொழிற்பாட்டுத் தேவை கருதி மிக உயர்வான குருதி சுற்றோட்டத்தினைக் கொண்டிருக்கும்.

இவ்வாறு பெருமளவில் சிறுநீரகங்களினூடாக சுற்றி ஓட்டப் படும் குருதியில் இருந்து புரதப்பொருள்கள், கனி உப்புக்கள், விற்ற மின்கள், ஓமோன்கள் போன்றவற்றை வடித்தெடுப்பதில் பங்கு பெறும் சிறுநீரக சிறுகுழாய்கள் உடலுக்குத் தேவையான யூரியா, யூரிக் கமிலம், கிறியற்றினின், மேலதிக நீர், மேலதிக கனி உப்புக்கள், தேவை யற்ற மருந்துப்பொருள்கள் போன்றவற்றை வடித்து சிறுநீரில் மூலம் வெளியகற்றுவதிலும் பங்கு பெறுகின்றது. மேலும் சிறுநீரகத்தில் இருந்து உற்பத்தி செய்யப்படும் ஓமோன்கள் சிறுநீரகத்தின் உள்ளக குருதி ஓட்டத்தை சீர் செய்வதிலும் உடலின் குருதிக்கலன்களின் உற்பத்தியினை சீர் செய்வதிலும் பங்கு பெறுகின்றன.

இவ்வாறு மனிதனின் ஆயுள்காலம் முழுவதும் தொடர்ச்சி யாகத் தொழிலாற்றிவரும் சிறுநீரகங்கள் பல்வேறு அக, புறக்காரணி களினால் பாதிக்கப்படும் போது உடல் தொழில்பாடும் பகுதியாகவோ அன்றி முழுமையாகவோ பாதிக்கப்படுகின்றது. சிறுநீரகத்தினைப் பாதிக் கும் நோய்கள் பின்வருமாறு பாகுபடுத்தப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரகத்தில் ஏற்படும் நோய்கள்

1. சிறுநீரகத்தில் ஏற்படும் கிருமித்தொற்று
2. சிறுநீரகத்தில் தோன்றும் கல்
3. சிறுநீரக அழற்சி நோய்
4. சிறுநீரகம் செயல் இழத்தல்
   i சடுதியாக தோன்றும் செயல் இழப்பு
   ii நீண்டகாலமாக தோற்றுவிக்கப்படும் செயல் இழப்பு
   iii. சலரோகம் போன்ற ஏனைய வருத்தங்களால் ஏற்படும் செயல் இழப்பு
5. அரிதாக புற்றுநோய்

## சிறுநீர் செல்லும் பாதையில் ஏற்படும் நோய்கள்

1. கிருமித்தொற்றினால் ஏற்படும் நோய்கள்
2. சிறுநீர் கல்லுக் காரணமாகத் தோன்றும் நோய்கள்
3. சிறுநீர் தொகுதியின் சுரப்பி வீங்குவதால் தோன்றும் நோய்கள்
4. சிறுநீர், இனப்பெருக்கத் தொகுதியினைத் தாக்கும் சமூக நோய்கள்
5. அரிதாக புற்றுநோய்

## சிறுநீரகத்திலும், சிறுநீர் செல்லும் பாதையிலும் தோன்றும் கிருமித்தொற்று

சல எரிவுடன் சலம் அடிக்கடி போதல், சலம் போகும் அளவு குறைவாக இருப்பதுடன், சில வேளைகளில் சலத்துடன் இரத்தமும் வெளியேறலாம். காய்ச்சலுடன் கூடிய இந்நோயானது ஆண்களிலும் பார்க்க பெண்களைக் கூடுதலாகத் தாக்கும் சந்தர்ப்பம் கொண்டது. இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயைக் கூடிய அளவில் நீரை அருந்துவதன் மூலம் (ஆகக் குறைந்த அளவு 12 கிளாஸ்) சுகாதாரமான ஒழுக்கமான பழக்கவழக்கங்களின் மூலம் வராமல் தவிர்க்கலாம். இவற்றையும் மீறிவரும் பட்சத்தில் ஆண்களில் இந்தக் கிருமித்தொற்றானது முதலாவது முறையாகவும் பெண்களில் இரண்டாவது முறையாக ஏறபட்டாலும் X-ray Ultra Sound போன்ற சாதனங்களின் உதவியுடன் மாற்றாகப் பரிசோதிக்கப் பட வேண்டும். தகுதியான வைத்தியரின் உதவியுடன் போதுமான காலத்துக்கு மருந்து வகைகளைப் பயன்படுத்துவதுடன் நோய் தோன் றிய காலத்தில் மிகக் கூடுதலான நீரை அருந்துவதன் மூலம் நோயைக் குணமாக்கலாம். மருந்து வகைகள் பயன்படுத்திய காலம் முடி வடைய, திரும்பவும் சலப் பரிசோதனை செய்து நோய் மாறியுள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

## சிறுநீரகத்தில், சிறுநீரகப் பாதையில் தோன்றும் கல்

தாங்கமுடியாத கடுமையான வயிற்றுவலி நாரிப்பகுதியிலோ, அடிவயிற்றிலோ தோன்றலாம். சிறுநீரகத் தொகுதியில் மாறாத கிருமித் தொற்று, சலம் போவது குறைவடைதல் என்பன இந்நோயின் அறிகுறி களாகும். X-ray Ultra Sound போன்றவற்றுடன் உறுதிப்படுத்தப்பட்ட பின் சத்திரசிகிச்சை மூலமோ கற்கள் உடைக்கப்பட்டு வெளி அகற்றப் படலாம். இவ்வாறு அடிக்கடி சிறுநீர் பாதையில் கல் தோன்றும் நோயாளர்கள் அந்தக்கற்களின் தன்மையினை ஆராய்வதன் மூலம் அந்தத்தன்மை கொண்ட உணவுப் பொருட்களை எடுக்காது தவிர்ப்ப தால் இந்நோயில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலலும்



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

குடும்பத்தின் தலைவனாக விளங்கி எம்மை விட்டு மறைந்த செய்தி கேட்டு உடனே ஓடிவந்து எமக்குப் பல வழிகளில் ஆறுதல் கூறி உதவிய அனைவருக்கும்,

இறுதிச்சடங்கில் பங்குகொண்டு பல வழிகளிலும் உதவியோருக்கும்,

தொலைபேசி, தந்தி மூலமும், நேரிலும் அனுதாபம் தெரிவித்த உறவினர், நண்பர்கள், மற்றும் பெருந்தகைகளுக்கும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்த வைத்திய சாலை பணியாளர் களுக்கும்,

அந்தியேட்டிகிரியையிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு ஈடுபட்ட அனைவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்,


**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Evergreen Printers, 693, K.K.S. Road - Jaffna. Tel.: 021-2219893
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org